உ

கடவுள் துணை.

ஸ்ரீமகாலட்சுமிக்கும் பார்வதிக்கும்

வாக்குவாதம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என், சி.

112

உ

கடவுள் துணை.

தனலட்சுமிக்கும்

தைரியலட்சுமிக்கும் தர்க்கம்.

சோபனம்.

சோபனமடி சோபனமே சுபசோபனந்தமிழ்பாட
மனதினிலேயீஸ்வரியாள் மலர்ப்பாதந்தெண்டனிட்டு
தனதைரியலட்சுமிகளின் தர்க்கசோபனந்தான்பாட
தப்பிதங்களிருந்தாலும் தரணியுள்ளோர்பிழைபொறுப்பீர்
மன்னரிடம்வாழுமிந்த மாதுதைரியலட்சுமியும்
அன்னநடைதனலட்சுமியின் அருகினிலேவந்துநின்று
கேளுங்கேளுமப்பியரே கெடிதானவார்த்தையென்று
இவ்வுலகில்வாழ்பவர்கள் எல்லோருமுந்தனைத்தான்

ஆள்கொல்லியென்றுஉன்னை உலகத்திலேசிடுவார்
தபசிகளும்ஞானிகளுந் தள்ளிவிட்டாருன்னைத்தான்
பணமென்னும்பாஷாண தலைதப் பாராமல்தள்ளிவிட்டார்
குணமில்லாப்பணமென்றுன்னைக் குப்பையிலேகொட்டிவிட்டார்
என்றுசொல்லதைரியலட்சுமி ஏதுசொல்லதனலட்சுமி
ஏண்டிஏண்டிதங்கையரே என்னைநீயேசவந்தாய்
என்னாலேயல்லாமல் உன்னாலேயேதாகும்
நானில்லாவிடங்களது நாயகியேவுண்டோடி
இருக்குந்தலங்களையும் எடுத்துரைப்பேன்கேளுமம்மா
சூட்சமுடன்சொல்லுகிறேன் செவிகொடுத்துக்கேளுமம்மா
பிள்ளையார்கோவிலுமென்னாலே பெருமாள்கோவிலுமென்னாலே
கோட்டைகொத்தளமென்னாலே கோர்ட்டுவழக்குமென்னாலே
வீடுவாசலுமென்னாலே நாடுநகரமென்னாலே
மாடமாளிகையென்னாலே கூடகோபுரமென்னாலே
முத்துகண்டிகையென்னாலே மோரமாலையுமென்னாலே
கம்மல்ஜிமிக்கையென்னாலே காப்புகொலுசுமென்னாலே

தங்கத்தாவடமென்னாலே தாலியுருவுமென்னாலே
சொம்புதவலைஎன்னாலே சொக்காதலைப்பாவென்னாலே
ஜோடுங்கொடையுமென்னாலே சொகுசுநடையுமென்னாலே
தளுக்குங்குலுக்குமென்னாலே தானதருமமென்னாலே
புத்தகங்களுமென்னாலே புகழ்பெறுவதுமென்னாலே
படிப்பதுவுமென்னாலே பாஸ்பண்ணுவதுமென்னாலே
கட்டில்சோபாவென்னாலே கனப்படுவதுமென்னாலே
காசிபுடைவையென்னாலே களிப்படைவதுமென்னாலே
தங்கப்புடைவையென்னாலே தளுக்குவதுமென்னாலே
சரிகைச்சேலையென்னாலே சாய்ந்தநடையுமென்னாலே
உப்பாடைத்துணிகளென்னாலே உயர்ந்தநகைகளென்னாலே
மாடுங்கண்ணும்ரொக்கரோசனம் மங்கையரேயென்னாலே
கன்னிக் ஸ்ரீயாப்பெண்களெல்லாங் கன்னிகழிவதென்னாலே
மணமில்லாப்புருஷரெல்லாம் மாப்பிள்ளையாவதுமென்னாலே
ஸ்ரீயும்புருஷனுமாய்ச் சேர்ந்துவாழ்வதுவுமென்னாலே
அத்தர்புனுகுசவ்வாதுபூசி ஆனந்தமாவதுமென்னாலே

ஞா ர. அ. ஊ ந.

மல்லிகைவாங்கிமயிர்கோதி வாரிமுடிப்பதுமென்றாலே
கச்சேரிகளுமென்றாலே காலட்சேபங்களென்றாலே
தேர்திருவிழாவென்றாலே தெய்வங்களுமென்றாலே
தோட்டங்களும்பங்களாவுந் தோகையரேயென்றாலே
கிணறுகளும் துறவுகளும் கிளிமொழியேயென்றாலே
கள்ளுசாராயம்குடித்துவிட்டு கனங்குலைவதுமென்றாலே
வெயில்படாமலேறிப்போகும் ரெயில்வண்டியுமென்றாலே
கண்காணுதேசப்போகப் பண்ணுங்கப்பலுமென்றாலே
சீக்கிரமாய்த்தான்போகும் ஸ்டீமர்கப்பலுமென்றாலே
படவுமீதிலிறங்குமந்தப் பலசரக்குமென்றாலே
மஞ்சள்பூசிகுங்குமமிட்டு மசக்கிநடப்பதுமென்றாலே
குடுத்தினிபாவாடைரவிக்கைபூண்டு குலுக்கிநடப்பதென்றாலே
முத்துபச்சைசமுழுவயிரம் மூக்குத்தியுமென்றாலே
ஜட்காவண்டிமீதிலேறிக் கோவில்போவதுமென்றாலே
கோச்சுவண்டிமீதிலேறிக் கோவில்போவதுமென்றாலே
பால்கோவாபன்னீர் பரிந்துண்பதுமென்றாலே

பண்டுபலாதிகளும் உண்டுகளிப்பதுமென்னாலே
பாவையர்கள்கைக்கிசைந்த பானைசட்டியுமென்னாலே
துடைப்பமுறமுங்கூடைகளுந் தோகையரேயென்னாலே
வர்த்தகருஞ்செட்டிகளும் வாழ்வடைவதுமென்னாலே
கொள்ளுவதுமென்னாலே கொடுப்பதுவுமென்னாலே
உண்பனவுமென்னாலே உடுப்பதுவுமென்னாலே
ஆவதுவுமென்னாலே அழிவதுவுமென்னாலே
என்றனிடபெருமையது எடுத்துரைக்கமுடியாது
இந்தவிதபுகழ்ச்சிகளை எப்படிநீயிசழ்ச்சிசெய்தாய்
என்னாலேயாவதெல்லாம் எடுத்துரைத்தேன்தையலரே
உன்னாலென்னகாரியங்கள் உலகத்திலாகுமம்மா
நன்னயமாகவிப்போ நானறியச்சொல்லுமம்மா
என்றவுடன்தைரியலட்சுமி எடுத்துரைப்பாளங்நேரம்
கேளுமம்மாஅப்பியரே கீர்த்தியுள்ளவென்பெருமை
தேவாதிதேவர்க்குந் தேசத்துமானிடர்க்குந்
அவரவர்கள்மனதிலே அகலாமல்நானிருந்து

ஆகாதகாரியத்தை அரைக்ஷணத்தில்நான்முடிப்பேன்
எப்படியென்றுநீ யேந்திழையேகேளுமம்மா
சுப்ரமணியர்சிந்தைதனிற் சுந்திரமாய்நானிருந்து
அழியாதசூரபத்மன் அதமானதுமென்னாலே
மாயவனார்தன்ம · தில் மகிழ்ச்சியுடநானிருந்து
மடியாதபத்மாசூரன் மாண்டதுவுமென்னாலே
பிரகலாதர்தன்மனதிற் பிரியமுடநானிருந்து
பேர்பெரியயிரண்யனுடல் பிளக்கச்செய்ததுமென்னாலே
இராமசுவாமிதன்மனதில் இரஞ்சிதமாய்நானிருந்து
பத்துமுடிஇராவணனைக் கொத்துடனேமாளச்செய்தேன்
சீதையம்மன்தன்மனதிற் சிறப்பாகநானிருந்து
சதகண்டராவணனைச் சங்கரித்ததுமென்னாலே
குசலவர்கள்தன்மனதிற் குடியாகநானிருந்து
பிலத்தவானரச்சேனைகளும் பிளப்பட்டதுமென்னாலே
மார்க்கண்டன்மனதில் மாறாமல்நானிருந்து
காலனும்மண்ணில்விழுந்து காரணமுமென்னாலே

பாண்டவர்கள்தன்மனதிற் பட்சமுடனானிருந்து
பாவிதுரியோதனனைப் பறக்கடித்ததுமென்றாலே
சீதைமராணிதன்மனதிற் சீராகநானிருந்து
கடல்சூழ்ந்தபூமியையோர் குடையிலாளுவதென்றாலே
மானிடர்கள்தன்மனதில் மகிழ்வுடனேநானிருந்து
அஷ்டநல்லசம்பத்தும் அடங்கலும்நான்தருவேன்
என்னுடையவல்லமையால் உன்னுடனேழ்பேர்களையும்
ஒருக்ஷணத்தில்வரவழைக்க ஒவ்வுமம்மாவென்றாலே
கோடானுகோடியுண்டு கொம்பனையேயென்றாலே
என்றுசொல்லதனலட்சுமி ஏதுசொல்வாள்தைரியலட்சுமி
ஆமாம்தங்கையரே அவ்வார்த்தைநிஜமோதான்
என்றிருவரொன்றாக பேசிவிட்டாரிருப்பிடமே
தனதைரியலட்சுமிகளின் தர்க்கமதைப்படித்தோர்கள்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

தனலட்சுமிக்கும் தைரியலட்சுமிக்கும் தர்க்கம்

முற்றிற்று.